

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, நேற்று முன்தினம் (3.2.2025) தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி புடவைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு. பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர் , நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத்தலைவர் எஸ். மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ARP.M. காமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.2.2025) இந்து சமய அறநிலையத்துறையின் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் திருவல்லிக்கேணி முத்துக்காளத்தி தெருவில் ரூ.94.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 3 குடியிருப்புகள் கொண்ட புதிய கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர் நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ARP.M. காமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான நேற்று முன்தினம், புதுடெல்லியில், கழக அலுவலகமான அண்ணா – கலைஞர் அறிவாலயத்தில் உள்ள அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு, கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமையில், கழக எம்.பி.க்கள் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

### மீனவர் பிரச்சினைக்கு

# இந்தியா - இலங்கை குழு பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்!

## புதுடெல்லியில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, பிப். 5 -

பேரறிஞர் அண்ணாவின் 56வது நினைவு நாளை ஒட்டி, டெல்லியில் அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி தலைமையில் தி.மு.க. எம்பிக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். டெல்லியில் உள்ள அண்ணா – கலைஞர் அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளையொட்டி அவரது திருவுருவப்படம் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்தது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கனிமொழி கருணாநிதி எம்.பி, அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஒவ்வொரு முறையும் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கும்போது, மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆனால், ஒன்றிய அரசாங்கம் நம்முடைய மீனவர்களுக்கும், இலங்கையில் இருக்கக் கூடிய மீனவர்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்திட வேண்டும். இதற்கு இலங்கை அரசாங்கத்திடம் பேசி நிரந்தர தீர்வு காண்பதற்காகக் குழுக்களை அமைப்பதாகப் பல ஆண்டுகளாக ஒன்றிய அரசு சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அந்த கூட்டங்கள் நடைபெற்றதாக எந்த செய்தியும் கிடையாது.

அந்த குழு கூட்டங்கள் நடத்தி, இதற்கு ஒரு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்று நாங்கள் மறுபடியும் வலியுறுத்துகிறோம். விரைவிலேயே ஒன்றிய அரசாங்கம் அங்கே கைது செய்யப்பட்டு இருக்கக் கூடிய நம்முடைய மீனவர்களை மற்றும் அவர்களுடைய படகுகளோடு மீட்டுத் தரவேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் மீண்டும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

தமிழ்நாடு தொடர்ந்து பல்வேறு விதங்களில் வஞ்சிக்கப்படுகிறது, ஆளுநர் பிரச்சினைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகள் குறித்து நாங்கள் நாடாளுமன்றத்தில் விவாதிப்போம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. குறிப்பிட்டார்.



கிருஷ்ணகிரி மாவட்ட அரசு குற்றவியல் பொது வழக்கறிஞர், முன்னாள் கிருஷ்ணகிரி மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் மு.விஸ்வபாரதி – அமுதா ஆகியோரின் இளைய குமாரன் ஜெயந்த்ஸ்ரீ – சங்கரி ஆகியோருக்கு காவேரிப்பட்டணத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.2.2025) இந்து சமய அறநிலையத்துறையின் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில் சார்பில் சேப்பாக்கம் அய்யா பிள்ளை தெருவில் ரூ.94.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 6 குடியிருப்புகள் கொண்ட புதிய கட்டடத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, நேற்று முன்தினம் (3.2.2025) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி புடவைகளை வழங்கினார். இந்நிகழ்வில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு. பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீ.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், நிலைக் குழுத்தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு. மண்டல குழுத்தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற உறுப்பினர் ARP.M. காமராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



கரூர் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு திருவிழாவில், நூற்றாண்டு நினைவு தூண் அடிக்கல் நாட்டியும், முன்னாள் இந்நாள் ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்களுக்கு நினைவு பரிசுகளை வழங்கியும், மின்சாரம் – மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். விழாவில் கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன் மற்றும் பலர் உள்ளனர்.




திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை நகர தி.மு.க. மற்றும் மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளின் நினைவினை போற்றும் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நகரச் செயலாளர் சி.வேலுச்சாமி தலைமையில், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜி.குகன் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக மாணவரணி தலைவர் இரா.ராஜீவ் காந்தி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், தலைமைக் கழகப் பேச்சாளர் சேலம் கோவிந்தன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் மாவட்ட அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ராசி கே.ஆர்.முத்துக்குமார், டி.சக்திவேல், பிரபாவதி பெரியசாமி, மாவட்ட பொருளாளர் கே.எம்.முபாரக் அலி உள்பட உள்பட பலர் கலந்து கொண்டனர்.